வாடிக்கையாளர் விழிப்புணர்வு

சைதன்யா இந்தியா ஃபின் கிரெடிட் பிரைவேட் லிமிடெட் ("**நிறுவனம்**" அல்லது "**CIFCPL**") RBI-ஆல் காலத்திற்கேற்ப மற்றும்/அல்லது தேவைக்கேற்ப / வழிகாட்டுதலுக்கேற்ப திருத்தப்பட்டதன் படி நவம்பர் 12, 2021 தேதிக்கு முன்பு வழங்கப்பட்ட முன் தொகைகளுடன் ("**RBI IRACP" விதிகள் தெளிவுபடுத்துதல்கள்**") தொடர்புடைய வருவாய் அங்கீகாரம், சொத்து வகைப்படுத்துதல் மற்றும் வழங்குதல் ஆகியவற்றை தவணை கடந்ததாக, SMA/NPA-ஆக வகைப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கும். மேலும் அத்தகைய கணக்குகளை புதுப்பித்தலும் மேற்கூறிய தெளிவுபடுத்துதலால் வழிகாட்டப்படும்.

அத்தகைய வகைப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் கீழே உள்ள முறைப்படி நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

- தவணை கடந்த தேதி:

நாள் முடிவு செயல்முறைகளின் போது (அத்தகைய செயல்முறையினை செயல்படுத்தும் நேரம் பொருட்டல்ல) எந்த பணமும் பெறப்படவில்லையென்றால் கணக்கு **தவணை கடந்த கணக்காக** குறிப்பிடப்படும்.

தவணை கடந்த தேதிக்கு உதாரணம்:

ஒரு கடன் கணக்குக்கு **தவணை கட்ட கடைசித் தேதி ஏப்ரல் 30, 20**** என்றால், நிறுவனம் இந்த தேதிக்கான நாள்-முடிவு செயல்முறையை செயல்படுத்துவதற்கு முன் முழு தவணைத் தொகை பெறப்படவில்லையென்றால், **தவணை கடந்த தேதி ஏப்ரல் 30, 20****.

- **சிறப்புக் குறிப்பீடு கணக்கு (SMA) மற்றும் செயல்படாத சொத்து (NPA) வகைப்படுத்துதல்:**

நிறுவனம் **அதன் நாள் முடிவு செயல்முறையை** செயல்படுத்தும் நேரத்தில் தவணை தவறியது அப்படியே இருந்தால் நிறுவனம் ஒரு கணக்கை **SMA அல்லது NPA**-ஆக குறிப்பிடும்.

RBI IRACP விதி தெளிவுபடுத்துதலில் வழங்கப்பட்டுள்ள படி வகைப்பாடு அளவுறு பின் வருமாறு:

சுழல் நிதி வசதிகள் தவிர்த்து மற்ற கடன்கள்	
SMA துணை வகைகள்	வகைப்படுத்துதலுக்கான அடிப்படை – அசல் அல்லது வட்டி செலுத்துதல் அல்லது வேறு ஏதேனும் தொகை மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ தவணை கடந்து கட்டப்படவில்லையென்றால்.
SMA-0	30 நாட்கள் வரை
SMA-1	30 நாட்களுக்கு மேல் மற்றும் 60 நாட்கள் வரை
SMA-2	60 நாட்களுக்கு மேல் மற்றும் 90 நாட்கள் வரை

உதாரணம்:

SMA-1 வகைப்பாடு:

மேற்கண்ட உதாரணத்தின் தொடர்ச்சியாக, **மே 30, 20**** நாள் முடிவு செயல்முறையை செயல்படுத்தும் போது கணக்கு தவணை கடந்ததாகவே இருந்தால், அது **SMA-1** ஆக வகைப்படுத்தப்படும்.

SMA-2 வகைப்பாடு:

அதேபோல், மேலே உள்ள கணக்கு **ஜூன் 29, 20**** நாள் முடிவு செயல்முறையை செயல்படுத்தும் போது தவணை கடந்ததாகவே இருந்தால், அது **SMA-2** ஆக வகைப்படுத்தப்படும்.

NPA வகைப்பாடு:

மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு **ஜூலை 29, 20**** நாள் முடிவு செயல்முறையை செயல்படுத்தும் போது தவணை கடந்ததாகவே இருந்தால், அது **NPA**-ஆக வகைப்படுத்தப்படும்.

- **NPA-வாக வகைப்படுத்தப்பட்ட கணக்குகளைப் புதுப்பித்தல்**

கணக்கு NPA-வாக ஒருமுறை வகைப்படுத்தப்பட்டு விட்டால், **மொத்தம் நிலுவையில் உள்ள வட்டி மற்றும் அசல் முழுவதும் கடன் பெற்றவரால்** அந்த குறிப்பிட்ட தேதிக்கான நாள் முடிவு நடவடிக்கையை செயல்படுத்தும் நேரத்தில் கட்டப்பட்டால் மட்டுமே நிலையான சொத்தாக புதுப்பிக்கப்படும்.

மறுசீரமைப்பு காரணமாக NPA-ஆக வகைப்படுத்தப்பட்ட கணக்குகளுக்கு தற்போதுள்ள அறிவுறுத்துதல்கள் தொடர்ந்து பொருந்தும்

- **பிரச்சனை குறித்த ஆய்வு:**

வ. எண்.	தேதி	விபரம்	கருத்துக்கள்
1.	ஜூன் 30, 20**	நாள் முடிவு செயல்முறையை செயல்படுத்தும் போது தவணை கட்டப்படாமல் இருப்பது	தவணை கடந்த தேதி
2.	ஜூலை 30, 20**	நாள் முடிவு செயல்முறையை செயல்படுத்தும் போது தவணை அப்படியே கட்டப்படாமல் இருப்பது	கணக்கு SMA-1-ஆக வகைப்படுத்தப்படும்.
3.	ஆகஸ்ட் 29, 20**	நாள் முடிவு செயல்முறையை செயல்படுத்தும் போது தவணை அப்படியே கட்டப்படாமல் இருப்பது	கணக்கு SMA-2-ஆக வகைப்படுத்தப்படும்.
4.	செப்டம்பர் 28, 20**	நாள் முடிவு செயல்முறையை செயல்படுத்தும் போது தவணை அப்படியே கட்டப்படாமல் இருப்பது	கணக்கு NPA-ஆக வகைப்படுத்தப்படும்.

NPA-ஆக வகைப்படுத்துப்பட்ட கணக்கு மொத்தம் நிலுவையில் உள்ள வட்டி மற்றும் அசல் முழுவதும் கடன் பெற்றவரிடமிருந்து பெறப்பட்டால் மட்டுமே நிலையான சொத்தாக புதுப்பிக்கப்படும். அதாவது நாளின் பழைய பாக்கி 0 வாக ஆகும் போதுதான்.